மார்க்கெட்

பிஎஸ்இ ↓ -353 பாயின்ட் 73,246

என்எஸ்இ ↓ -51 பாயின்ட் 22,699



தங்கம் ↑ +480

1 சவரன் ₹1,05,560

1 கிராம் ₹13,195



வெள்ளி

விலையில் மாற்றம் இல்லை

1 கிலோ ₹2,20,000

1 கிராம் ₹220

$ டாலர் 95.22

விலை நிலவரம்

பெட்ரோல் ₹107.77

டீசல் ₹99.55



ஐசிசி டி20 பேட்டிங் தரவரிசை

அபிஷேக் மீண்டும் நம்பர் 1

துபாய், அக். 29: சர்வதேச டி20 போட்டிகளுக்கான ஐசிசி பேட்டிங் தரவரிசை பட்டியலில் இந்திய அணி தொடக்க வீரர் அபிஷேக் ஷர்மா மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறினார்.

நியூசிலாந்து அணிக்கு எதிராக வெலிங்டனில் நடந்த 3வது டி20ல் அதிரடியாக 38 பந்தில் 113 ரன் விளாசிய அபிஷேக், டி20 பேட்டிங் தரவரிசையில் 897 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறினார்.

பாகிஸ்தானின் சாஹிப்ஸதா பர்ஹான் (883) 2வது இடத்தை பிடித்த நிலையில், காயம் காரணமாக ஓய்வெடுத்து வரும் இஷான் கிஷன் (866) 2 இடங்கள் பின்தங்கி 3வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.



டி20 பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் பெரிய மாற்றம் ஏதுமில்லை. அதே சமயம் டெஸ்ட் பவுலிங் தரவரிசையில் தென் ஆப்ரிக்க வேகம் மார்கோ யான்சென் 5 இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்துள்ளார்.

டி20 டாப் 10 பேட்ஸ்மேன்

ரேங்க்	வீரர்	புள்ளி
1	அபிஷேக் வர்மா (இந்தியா)	897
2	ஷாகிப்ஸதா பர்ஹான் (பாக்.)	883
3	இஷான் கிஷன் (இந்தியா)	866
4	ஹாரி புரூக் (இங்கிலாந்து)	793
5	ஜோஸ் பட்லர் (இங்கிலாந்து)	789
5	டிவால்ட் பிரெவிஸ் (தெ.ஆப்.)	789
7	சுபில் சால்ட் (இங்கிலாந்து)	775
8	ஷாய் ஹோப் (வெ.இண்டீஸ்)	759
9	ஷ்ரேயாஸ் அய்யர் (இந்தியா)	758
10	திலக் வர்மா (இந்தியா)	724

ரஞ்சி கோப்பை லீக் ஆட்டம்

5 விக்கெட் வித்தியாசத்தில் ரயில்வேஸை வீழ்த்தியது தமிழ்நாடு

சென்னை, அக். 29: ரயில்வேஸ் அணியுடனான ரஞ்சி கோப்பை எலைட் டி பிரிவு லீக் ஆட்டத்தில், தமிழ்நாடு அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்று 6 புள்ளிகள் பெற்றது.

சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் அரங்கில் நடந்த இப்போட்டியின் முதல் இன்னிங்சில் ரயில்வேஸ் 184 ரன், தமிழ்நாடு 165 ரன் எடுத்து ஆல் அவுட் டாகின. 19 ரன் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை விளையாடிய ரயில்வேஸ் 108 ரன்னில் சுருண்டது (52.3 ஓவர்).

தமிழ்நாடு பந்துவீச்சில் கேப்டன் சாய் கிஷோர் 4, ஹேம்சுதேஷன் 3, அஜித் ராம் 2, குர்ஜப்னீத் 1 விக்கெட் வீழ்த்தினர். அடுத்து 128 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தமிழ்நாடு 59.1 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 130 ரன் எடுத்து வென்றது.

அதிஷ் 21, ஜெகதீசன் 12, சோனு யாதவ் 2, பாபா இந்திரஜித் 23, பிரதோஷ் ரஞ்சன் பால் 1 ரன்னில் அவுட்டாகினர். ஆந்த்ரே சித்தார்த் 56 ரன், விமல் குமார் 10 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். 2 இன்னிங்சிலும் சேர்த்து 7 விக்கெட் வீழ்த்திய சாய் கிஷோர் ஆட்ட நாயகன் விருது பெற்றார். தமிழ்நாடு அணி 6 புள்ளிகளை தட்டிச் சென்றது.

சில்லி பாயின்ட்

- யு19 உலக பாக்சிங் சாம்பியன்ஷிப் தொடரின் ஆண்கள் 55 கிலோ எடைபிரிவில் இந்தியாவின் ஆதித்யா தங்கப் பதக்கம் வென்றார். பைனலில் ரஷ்யாவின் இஸ்லாம் மகோமெதோவுடன் மோதிய ஆதித்யா 4-1 என்ற புள்ளிக் கணக்கில் வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.
- லங்காஷயர் கிளப் அணிக்காக 25 ஆண்டுகள் விளையாடிய இங்கிலாந்து வேகம் ஜேம்ஸ் ஆண்டர்சன் (44 வயது), அந்த அணியில் இருந்து வெளியேறி இத்தாலியில் நடக்கும் 10 ஓவர் கிரிக்கெட் தொடரில் நேப்பிள்ஸ் அணிக்காக விளையாட உள்ளதுடன் இணை உரிமையாளராகவும் முதலீடு செய்துள்ளார்.
- மகளிர் பிரிமியர் லீக் 2027 தொடருக்கான வீராங்கனைகள் ஏலம் கொச்சியில் நேற்று நடந்தது. ஆஸ்திரேலிய அணி கேப்டன் சோபி மோலினி யுக்ஸை ரூ.1.10 கோடிக்கு உ.பி வாரியர்ஸ் அணி வாங்கியது.
- மிர்பூரில் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிராக நேற்று தொடங்கிய முதல் டெஸ்டில், வங்கதேசம் முதல் நாள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 213 ரன் எடுத்துள்ளது (74 ஓவர்). ஷத்மன் இஸ்லாம் 99, லிட்டன் தாஸ் 10 ரன்னுடன் களத்தில் உள்ளனர்.

ஜிம்பாப்வேயுடன் ஒருநாள் தொடர்

ஹாட்ரிக் வெற்றியுடன் ஒயிட்வாஷ் செய்தது இந்தியா

வதோதரா, அக். 29: ஜிம்பாப்வே மகளிர் அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரின் 3வது போட்டியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்ற இந்தியா, 3-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாகக் கைப்பற்றி அசத்தியது.

வதோதராவில் நேற்று நடந்த இப்போட்டியில், டாஸ் வென்று பேட் செய்த ஜிம்பாப்வே அணி 39.5 ஓவரில் 131 ரன்னுக்கு ஆல் அவுட்டானது (மாடெஸ்டர் 37, கேப்டன் ஜோசபின் 35, சியட்ஸா துருரு 20). இந்திய பந்துவீச்சில் வைஷ்ணவி 5 விக்கெட் வீழ்த்தினார். கிராந்தி, சாயாலி தலா 2 விக்கெட் கைப்பற்றினர்.

அடுத்து களமிறங்கிய இந்தியா பிரதிகா ராவல் - ஷபாலி வர்மா ஜோடி 3வது விக்கெட்டுக்கு அதிரடியாக விளையாட... 17 ஓவரிலேயே 133 ரன் எடுத்து ஹாட்ரிக் வெற்றியை வசப்படுத்தியது. பிரதிகா 59 ரன் (56 பந்து, 4 பவுண்டரி, 3 சிக்சர்), ஷபாலி 51 ரன்னுடன் (26 பந்து, 6 பவுண்டரி, 3 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா 3-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாகக் கைப்பற்றி ஒயிட்வாஷ் செய்தது. வைஷ்ணவி ஆட்டநாயகி விருதும், பிரதிகா ராவல் (220 ரன்) தொடர்நாயகி விருதும் பெற்றனர்.

கதம்பம்

உல்லாசத்துக்கு மறுத்ததால் தகராறு

கள்ளக்காதலியின் மாமனாரை அடித்துக்கொன்ற லாரி டிரைவர்

திருப்பத்தூர் அருகே பரபரப்பு

திருப்பத்தூர் அக்.29: திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அடுத்த டி.வீரப்பள்ளி பகுதியை சேர்ந்தவர் நந்தியப்பன் (50), லாரி டிரைவர். இவருக்கு திருமணமாகி பிள்ளைகள் உள்ளனர். அதே பகுதியை சேர்ந்தவர் ரோஜா (45). இவருக்கு திருமணமாகிவிட்டது. இவர்கள் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டு கள்ளக்காதலாக மாறியது.

இந்நிலையில் கடந்த 23ம் தேதி உல்லாசமாக இருக்க வரும்படி ரோஜாவை, நந்தியப்பன் அழைத்ததாக கூறப்படுகிறது. ஆனால் ரோஜா வரமறுத்தாராம். இதனால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

அப்போது அங்கு வந்த அதே பகுதியை சேர்ந்த ரோஜாவின் சின்ன மாமனாரான அதே பகுதியை சேர்ந்த செல்வம் (60) என்பவர் நந்தியப்பனை தட்டிக் கேட்டதாக தெரிகிறது.

இதில் ஆத்திரமடைந்த நந்தியப்பன், அங்கிருந்த இரும்பு ராடால் செல்வத்தை சரமாரியாக தாக்கியுள்ளார். இதில் படுகாயமடைந்த செல்வம் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.



▶ கொலையான நந்தியப்பன், கைதான செல்வம்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அவர் திடீரென உயிரிழந்துள்ளார். அவரதுசடலத்தைஅடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர். இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற கந்திலி போலீசார், செல்வத்தின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனையில் செல்வம், இரும்பு ராடால் தாக்கப்பட்டதில் இறந்தது தெரியவந்தது.

இதுதொடர்பாக கந்திலி போலீசார் வழக்குப்பதிவு செய்து நந்தியப்பனை நேற்று கைது செய்து திருப்பத்தூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியில் அதிமுகவினர் தீவிரமாக ஈடுபட வேண்டும்

எடப்பாடி பழனிச்சாமி வலியுறுத்தல்

சென்னை, அக்.29: அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

2027 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தப் பணிகள் நடைபெற உள்ளன. வரைவு வாக்காளர் பட்டியல் நவம்பர் 12ம் தேதி வெளியிடப்படுகிறது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பங்களை நவம்பர் 12ம் தேதி முதல் டிசம்பர் 11ம் தேதி வரை அளிக்கலாம்.

இதற்காக நவம்பர் 21, 22, 28 மற்றும் 29ம் தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றன. இறுதி வாக்காளர் பட்டியல் 2027 ஜனவரி 4ம் தேதி வெளியிடப்பட உள்ளது.

இந்தப் பணியில் அதிமுக தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், கட்சியின் பல்வேறு நிலை நிர்வாகிகள், உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், கட்சித் தொண்டர்கள், குறிப்பாக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.



18 வயது நிறைவடைந்த வர்கள் மற்றும் 17 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள், இளம்பெண்கள், இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள், புதிதாகக் குடியேறியவர்கள் ஆகியோரின் பெயர்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் முறைகேடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், உடனடியாக சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்து உரிய தீர்வு காண வேண்டும்.

தொடர்பு கொள்ள முடியாததால்

கட்சியில் இருந்து சசிகலா அதிரடி நீக்கம்

சென்னை, அக்.29: சென்னை வளசரவாக்கத்தில் உள்ள அஇஅதிமுக-வின் தலைமை அலுவலகத்தில் கட்சியின் நிறுவனர் சக்கரவர்த்தி நேற்று முன்தினம் நிருபர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறும்போது, தமிழக அரசையும் தற்போதைய ஆட்சியையும் கண்டித்து இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், கடந்த 2026ம் ஆண்டு கட்சியின் பொதுச் செயலராக பொறுப்பேற்ற சசிகலா (மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி), தேர்தல் முடிவடைந்த பின்னர் கட்சி பணிகளில் ஈடுபடவில்லை. அவரை தொடர்பு கொண்டு சந்திக்க முடியவில்லை. இதனால், சசிகலாவை பொதுச் செயலாளர்ர் பொறுப்பில் இருந்து நீக்கப் படுகிறார் எனத் தெரிவித்தார். இதுதொடர்பாகத் தேர்தல் ஆணையத்திற்கும் கடிதம் அனுப்பியுள்ளதாக குறிப்பிட்ட சக்கரவர்த்தி, வரும் பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் சசிகலாவின் நீக்கம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



மேலும் புதிய பொதுச் செயலாளர் விரைவில் நியமிக்கப்படுவார் என்றும் சக்கரவர்த்தி தெரிவித்தார்.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் நேரில் ஆஜராகுமாறு கோரும் அறிவிப்பு

(பார்க்க 84 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

என்னிடம் அளிக்கப்பட்டிருக்கும் புகாரின்பேரில் டெல்லி பொருளாதார குற்றங்கள் பிரிவு காவல்நிலையத்தில் FIR No.133/2022, தேதி: 05.09.2022 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 420/406/120B -இன் கீழ் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட **மோகன்,** தபெ, ஜெய்பிரகாஷ், இருப்பிடம்: கம்மவார் புதூர், கரிகிரி அஞ்சல், காட்பாடி தாலுகா, வேலூர் மாவட்டம், தமிழ்நாடு-632106, என்ற குற்றம் செய்த (அல்லது குற்றம் செய்ததாக சந்தேகப்படும்) நபரை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், குற்றம்சாட்டப்பட்ட நபர் மோகனை கண்டுபிடிக்க முடியவில்லை. குற்றம்சாட்டப்பட்ட மோகன், எனக்குத் தெரிந்தவரையில் தலைமறைவாகிவிட்டார். (அல்லது கைது உத்தரவு நடவடிக்கையில் இருந்து தப்பிப்பதற்காக ஒளிந்து கொண்டிருக்கிறார்). இங்கே வெளியிடப்பட்டிருக்கும் அறிவிப்பின்படி, புகாரின்பேரில் டெல்லி பொருளாதார குற்றங்கள் பிரிவு காவல்நிலையத்தில் FIR No. 133/2022, தேதி: 05.09.2022 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 420/406/120B இன் கீழ் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட மோகன், இந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டுள்ள புகாருக்குப் பதில் அளிப்பதற்காக 07.12.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஆஜராக வேண்டும் என்று இதன்மூலம் பிரகடனம் செய்யப்படுகிறது.

உத்தரவின்படி,
திரு. மிருதுல் குப்தா,
எல்டி.தலைமை நீதித்துறை மாஜிஸ்திரேட்,
பாட்டியாலா ஹவுஸ் கோர்ட்ஸ், புது டெல்லி

DP/15279/EOW/2026
(நீதிமன்ற விவகாரம்)

டீசல் வாங்கக்கூட நிதியின்றி தவிக்கும் அவலம்

வெற்றி பயண திட்ட நிதியை மாதம்தோறும் வழங்க வேண்டும்

அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, அக்.29: பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியதாவது: வெற்றி பயண திட்டத்துக்கு கூடுதலாக ரூ.5,000 கோடி முதல் ரூ.6,000 கோடி வரை ஒதுக்கி, மொத்தம் ரூ.9,000 கோடி முதல் ரூ.10,000 கோடி வரை நிதி வழங்க வேண்டும். போக்குவரத்துக் கழகங்கள் அன்றாடச் செலவுகளைச் சமாளிக்கும் வகையில், திட்டத்துக்கான நிதியை ஒவ்வொரு மாதமும் முன்கூட்டியே வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.



KALAKSHETRA FOUNDATION
(An Autonomous Body under Ministry of Culture, Government of India)
Thiruvanmiyur, Chennai - 600 041.

Applications are invited from candidates for filling various posts under Kalakshetra Foundation **on Deputation/Short term contract and Direct recruitment.**
The Recruitment Notice has been published in the Employment News dated 24-30 October 2026. Further information are available on **www.kalakshetra.in.**
Closing date for receipt of applications in KF by post is 23-11-2026.
DIRECTOR

பிரபல ரவுடி சிடி மணி துப்பாக்கி முனையில் கைது

தொழிலதிபர்களை மிரட்டி மாமூல் வசூலிக்க சென்னை புறநகரில் முகாமிட்டது அம்பலம்

சொகுசு காரில் இருந்து ரூ.20 லட்சம் பறிமுதல்

சென்னை, அக்.29: சென்னை தேனாம்பேட்டை சத்திய மூர்த்தி நகரை சேர்ந்தவர் மணிகண்டன் (52). தேனாம்பேட்டை நடைபாதையில் சிடி விற்பனை செய்து வந்த அவர், சிறு சிறு குற்றங்களில் ஈடுபட்டு ரவுடி திண்டுக்கல் பாண்டியின் மறைவுக்கு பிறகு ரவுடியாக உருவெடுத்தார். சிடி விற்பனை செய்து வந்ததால் இவரை சிடி மணி என்று ரவுடிகள் செல்லமாக அழைத்தனர். இதனால் பிற்காலத்தில் தனது பெயரை சிடி மணி என்று வைத்துக் கொண்டர்.

தென் சென்னை பகுதியில் முக்கிய ரவுடியாக உருவான இவர், பிரபல தாதா சம்பவம் செந்தில், என்கவுன்டர் செய்யப்பட்ட ரவுடி ராதா, காக்கா தோப்பு பாலாஜி ஆகியோரின் நெருங்கிய கூட்டாளி யாவர். இவர் மீது 2007ம் ஆண்டு தேனாம்பேட்டையில் நடந்த வெங்கட் கொலை, 2009ம் ஆண்டு கோயம்பேட்டில் நடந்த வாழைத்தோப்பு சதீஷ் கொலை, 2012ம் ஆண்டு நடந்த கோட்டூர்புரம் ஆவி சுரேஷ் கொலை, 2013 ஆண்டு வேலூர் சிலோன் மோகன் கொலை, கே.கே. நகரில் இரட்டை கொலை வழக்கு என 10 கொலை, கொலை முயற்சி உட்பட 30க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

திருச்சி ராமஜெயம் கொலை வழக்கிலும் இவர் பின்னணியில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. 5 முறை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர். தமிழகத்தில் உள்ள ரவுடிகள் பட்டியலில் சிடி மணி 'ஏ பிளஸ்' கேட்டகிரி ரவுடி பட்டியலில் முதல் 3வது இடத்தில் உள்ளார்.

மேலும், ஐடெக் ரவுடியான இவர், 10 ஆண்டுகளுக்கு முன், டெல்லியில் விற்பனைக்கு வந்த குண்டு துளைக்காத சொகுசு கார் வாங்கிய முதல் ரவுடியும் இவர் தான். தென் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ரியல் எஸ்டேட் தொழில், தொழிற்சாலைகளில் ஸ்கிராப் மொத்தமாக வாங்கும் தொழில் செய்து வருகிறார்.

தொழிலதிபர்களை கடத்தி பணம் கேட்டு மிரட்டுதல், கட்டப்பஞ்சாயத்து, ரியல் எஸ்டேட் அதிபர்களை மிரட்டி நிலத்தை எழுதி வாங்குவது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்நிலையில் சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு பிறகு போலீசாரின் என்கவுன்டருக்கு பயந்து ரவுடி சிடி மணி தமிழகத்தை விட்டு வெளி மாநிலங்களுக்கு தப்பி ஓடிவிட்டார். பிறகு தவெக அரசு தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு ரவுடி சிடி மணி வெளிமாநிலத்தில் இருந்து மீண்டும் தமிழகத்திற்கு திரும்பி, சேலத்தில் பதுங்கி தனது ரவுடி தொழிலை செய்து வந்தார்.



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தென் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ளி தொழிலதிபர்கள், வியாபாரிகள், ரியல் எஸ்டேட் அதிபர்களிடம் மாமூல் வசூலிக்கும் வகையில் கடந்த ஒரு வாரமாக புறநகர் பகுதிகளில் முகாமிட்டிருந்தார்.

இதுகுறித்து சென்னை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்படி தனிப்படை ஒன்று செங்கல்பட்டு மாவட்டம் சிங்கபெருமாள் கோயில் அருகே ரகசியமாக கண்காணித்து வந்தனர். அப்போது, ரவுடி சிடி மணி, வியாபாரிகளிடம் தீபாவளி மாமூல் வசூலித்து வந்தது உறுதியானது. நேற்று முன்தினம் இரவு சிங்கப்பெருமாள் கோயிலில் இருந்து தீபாவளி பண்டிகைக்கு வசூலித்த மாமூல் பணத்துடன் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள வீட்டிற்கு தனது சொகுசு காரில் சென்றபோது, தனிப்படை உதவி ஆய்வாளர் ஜெய்கணேஷ் தலைமையிலான குழுவினர் துப்பாக்கி முனையில் அவரை கைது செய்தனர்.

போலீசார் தன்னை சுற்றி வளைத்துவிட்டதை உணர்ந்த ரவுடி சிடி மணி, கைதுக்கு முன்பு தனது செல்போனில் நேரலையில் 'தன் மீது உதவி ஆய்வாளர் ஜெய்கணேஷ் என்பவர் பொய் வழக்கு பதிந்து கைது செய்து விட்டதாக' வீடியோ ஒன்று வெளியிட்டுள்ளார்.

அதைதொடர்ந்து சிடி மணியின் சொகுசு காரை போலீசார் சோதனை செய்தபோது, அதில் கட்டுக்கட்டாக ரூ.20 லட்சம் இருந்தது. இதையடுத்து அந்த பணம் மற்றும் சொகுசு காரை பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட ரவுடி சிடி மணியை போலீசார் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

காணவில்லை



ரெஜி P.V.	சூசன் ரெஜி	ஜோமெட் ரெஜி
வயது: 62 உயரம்: சுமார் 5' 5" உடலமைப்பு: நடுத்தர உடலமைப்பு சிறப்பம்சங்கள்: தாடி இல்லை, மீசை உண்டு, நரைத்த முடி, வழுக்கை, எப்போதும் கண்ணாடி அணிந்திருப்பார் மற்றவை: நடப்பதில் சிரமம்	வயது: 58 உயரம்: சுமார் 5 அடி உடலமைப்பு: நடுத்தர உடலமைப்பு சிறப்பம்சங்கள்: போதுமான அளவு முடி உடை: வழக்கமாக புடவைகள் மற்றும் சுடிதார்கள் அணிவார்.	வயது: 35 உயரம்: சுமார் 5'5" உடலமைப்பு: நடுத்தர உடலமைப்பு சிறப்பம்சங்கள்: தாடி உண்டு, நீண்ட முடி வைத்திருப்பார். உடை: பொதுவாக பேண்ட்கள் மற்றும் சட்டைகள் அணிவார்.

மேலே உள்ள புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள நபர்களான (1) ரெஜி P.V (வயது 62), (2) சூசன் ரெஜி (வயது 58), (3) ஜோமெட் ரெஜி (வயது 35) ஆகியோர், கோட்டயம் மாவட்டம், பனச்சிக்காடு கிராமம், பூவந்தூருத் அஞ்சல் நிலையம், கிழக்கேமூலா, பாலமட்டத்தில் இல்லத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள், கோட்டயம், கேரளா, இந்தியா, கோட்டயம் கிழக்கு காவல் நிலையத்தில் கே.பி. சட்டத்தின் பிரிவு 57-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 1352/2026-இன் படி, 26/09/2026 அன்று காணாமல் போயுள்ளனர். அவர்கள் இருக்கும் இடம் குறித்து யாருக்கேனும் தகவல் தெரிந்தால், தயவுசெய்து பின்வரும் தொடர்பு எண்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கவும்.

கோட்டயம் கிழக்கு காவல் நிலையம் (கேரளம்) - 0481 256 0333
SHO, கோட்டயம் கிழக்கு P.S (கேரளம்) - 9497987071
SI, கோட்டயம் கிழக்கு P.S (கேரளம்) - 9497980326

RO.NO:389/F2/2026/I&PRD

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹோகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலக அலகு: 2 தளம், பி-பிளாக், எண்.5, ஆர்ஜே பிளாசா, காட்பாடி பிரதான சாலை, பாலாறு பாலம் அருகில், விருதம்பட்டு, வேலூர்-632006.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீடு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்-ஏலம் மூலமாக 30.11.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விவரங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்து ஏதேனும் (K)
1	**கடன் எண் HF0111H21100029 உதயகுமார் மோகன் (கடன்தாரர்), ஆர்த்தி உதயகுமார் (உப கடன்தாரர்)**	10.05.2025 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.5,15,387/- (ரூபாய் ஐந்து லட்சத்து பதினைந்தாயிரத்து முந்நூற்று எண்பத்தேழு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 17.35% வட்டி.	நேரடி	வேலூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம், பெர்னாம்பட்டு தணை மாவட்டம், பேரணாம்பட்டு தாலுகா, பேரணாம்பட்டு கிராமம், ஜே.ஜே. நகர், நத்தம் S.No.582/1a2 இல் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதிகளும் உள்ள சொத்து. மனை எண்.138 இன் எல்லைகள்: மேற்கில்:தெரு, கிழக்கில்: மனை எண்.143, வடக்கில்: தெரு, தெற்கில்: மனை எண்.139, அளவீடு: கிழக்கில் மேற்காக 11.4 மீ., வடக்கு தெற்காக 7 மீ., மொத்தம் 80 சதுர மீட்டர் மற்றும் கட்டுமானங்கள் மற்றும் சேவை இணைப்புகள் அதில் அமைந்துள்ளன. வடக்கு: தெரு தெற்கு: மனை எண்.139 மேற்கு: தெரு கிழக்கு: மனை எண்.143	Rs. 894338.00/- (ரூபாய் எட்டு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து முந்நூற்று முப்பத்தெட்டு மட்டும்)	Rs. 89433.80/- (ரூபாய் எண்பத்தொன்பது லட்சத்து நானூற்று முப்பத்து மூன்று மற்றும் பைசா எண்பது மட்டும்)	27.11.2026 மாலை 5.00 மணிக்கு முன்பாக	10,000/-	23-11-2026 (11AM – 4PM)	30-11-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை
3.	**கடன் எண் HF0111H20100141 குப்பன் K (கடன்தாரர்), அனைத்து அறிந்த மற்றும் அறியப்படாத சட்டப்பூர்வ வாரிசுகள் பவித்ரா K (காலம்சென்றதிலிருந்து) (உப கடன்தாரர்), செந்தில்குமார் D**	11.12.2025 தேதியின்படி ரூ.6,86,643/- (ரூபாய் ஆறு லட்சத்து எண்பத்தாறாயிரத்து, அறுநூற்று நாற்பத்து மூன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 17.85% வட்டி.	நேரடி	ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் பதிவு மாவட்டம், காவேரிப்பாக்கம் துணை பதிவு மாவட்டம